சார்பு நீதிமன்றம், குளித்தலை.

முன்னிலை: – திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, குளித்தலை.

2025–ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17–ஆம் தேதி வியாழக்கிழமை

I.A.NO.8/2024 in O.S.No.55/2019

நாககன்னி . . . மனுதாரர் / வாதி

/எதிர்/

1. பாப்பாத்தி(இறப்பு)

2. முத்தையா(இறப்பு)

3. பிரியா

4. மகேஸ்வரி

5. மாவட்ட ஆட்சியர், கரூர்

6. சார்பதிவாளர், கிருஷ்ணராயபுரம்

7. வட்டாட்சியர், கிருஷ்ணராயபுரம்

8. செயல் அலுவலர், கிருஷ்ணராயபுரம் . . . எதிர்மனுதாரர்கள் / பிரதிவாதிகள்.

/ மற்றும் /

9. சாந்தி

10. கார்த்திக்

11. அனிதா . . . 9, 10, 11 உத்தேச பிரதிவாதிகள் / 2 ம் பிரதிவாதியின் வாரிசுகள்

உத்தரவு

மனுதாரர் தரப்பில் கட்டளை 22 விதி 4 மற்றும் பிரிவு 151 சி.பி.சி–ன் படி இரண்டாவது பிரதிவாதியின் வாரிசுகளை உத்தேச பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள் : 05.09.2024

இறுதி விசாரணை செய்த நாள் : 26.02.2025

உத்தரவு பகரப்பட்ட நாள் : 17.04.2025

மனுதாரர்/ வாதி : திரு.V.தியாகு–வழக்கறிஞர்

1 மற்றும் 2 எதிர்மனுதாரர்கள் : இறப்பு

4 மற்றும் 6 முதல் 8 எதிர்மனுதாரர்கள் /

4 மற்றும் 6 முதல் 8 பிரதிவாதிகள் : அழைத்தும் ஆஜராகாக காரணத்தினால் தோன்றாதரப்பினராக கருதப்பட்டுள்ளார்கள்.

5ம் எதிர்மனுதாரர்/5ம் பிரதிவாதிக்காக : அசல் வழக்கில் தோன்றாதரப்பினராகியுள்ளார்

9 முதல் 11 எதிர்மனுதாரர்களுக்காக : தோன்றாதரப்பினராகியுள்ளார்கள்.

3 வது எதிர்மனுதாரர்/3 வது பிரதிவாதிக்காக : திரு.R.M.செந்தில்–வழக்கறிஞர்

1. மனுவின் சுருக்கம்

இம்மனுவின் மனுதாரர் பாக பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் இருந்த நிலையில் அசல் வழக்கின் முதல் பிரதிவாதி 10.7.2019ம் தேதி மற்றும் இரண்டாம் பிரதிவாதி 4.8.2019ம் தேதி இறந்துவிட்டதாக மெமோ தாக்கல் செய்த நிலையில் மேற்படியார்களின் வாரிசுகளை அசல் வழக்கில் தரப்பினர்களாக சேர்க்க கோரி மனு தாக்கல் செய்யவேண்டுமென மனுதாரரின் வழக்கறிஞர் கூறிய நிலையில் முதல் பிரதிவாதிக்கு யாதொரு வாரிசும் இல்லை. இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கொரோனா தொற்று இருந்தபடியால் மனுதாரரால் உரிய மனு தாக்கல் செய்ய இயலவில்லை. எனவே, இரண்டாவது பிரதிவாதியின் வாரிசுகளை உத்தேச பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. நான்கு மற்றும் ஆறு முதல் எட்டு எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக ஆகியுள்ளார்கள். 9 முதல் 11 எதிர்மனுதாரர்கள் தோன்றாதரப்பினர்களாக ஆகியுள்ளார்கள். ஐந்தாவது எதிர்மனுதாரர் அசல் வழக்கில் தோன்றாதரப்பினராகிவிட்டார்.

3. மூன்றாவது எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்.

மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் செல்லத்தக்கதல்ல. எதிர்மனுதாரரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகள் தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. மனுதாரர் வேண்டுமென்றே இறந்தவர்களின் வாரிசுகளை சேர்க்க காலதாமதம் செய்துள்ளார். மனுதாரரின் மனுவானது காலதாமதமாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. எனவே மனுதாரரின் மனுவினை எதிர்மனுதாரர் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென கோரியுள்ளார்.

4. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை, சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5. மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் மனுதாரர் அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்துள்ளதால், மனுதாரர் கோரிய பரிகாரம் மனுதாரருக்கு கிடைக்கத்தக்கது என வாதிட்டார்.

6. எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் அவருடைய வாதுரையில் மனுதாரர் அவரது வழக்கினை தகுந்த சாட்சி மற்றும் சான்றாவணங்களின் வாயிலாக நிரூபணம் செய்யவில்லை என்பதால், மனுதாரர் கோரிய பரிகாரம் அவருக்கு கிடைக்கத்தக்கதல்ல என வாதிட்டார்.

7. தீர்வு

(அ) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது.

(ஆ) இம்மனுவின் மனுதாரர் / வாதியானவர், எதிர்மனுதாரர்கள் மீது பாகப்பிரிவினை மற்றும் இதர பரிகாரங்கள் கோரி அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்த நிலையில் 1 மற்றும் 2 மனுதாரர்கள் வெவ்வேறு தேதிகளில்

இறந்து போக, மேற்படி இரண்டாவது பிரதிவாதியின் வாரிசுகளை உத்தேச பிரதிவாதிகளாக சேர்க்கக்கோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

(இ) மேற்படி மனுதாரரின் மனுவில் கூறியுள்ள காரணங்கள் நம்பத்தகுந்ததாகவும், ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும் உள்ளது. எனவே இம்மனுவினை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் அனுமதிக்கலாம் என முடிவு செய்யப்படுகிறது.

முடிவாக, இம்மனுவின் மனுதாரர், மூன்றாவது எதிர்மனுதாரருக்கு மனு செலவுத்தொகையாக ரூ.1,000/–த்தினை 05.06.2025 க்குள் செலுத்த வேண்டுமென உத்தரவிடப்படுகிறது. தவறும்பட்சத்தில் இம்மனு தாமாகவே தள்ளுபடியாகிவிடும்.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப் பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025–ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17–ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

E MUTHUSAMY
Digitally signed by E MUTHUSAMY
DN: cn=E MUTHUSAMY, ou=SRIVILLIPUTTUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

சார்பு நீதிபதி,
குளித்தலை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை.
எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்: இல்லை.

E MUTHUSAMY
Digitally signed by E MUTHUSAMY
DN: cn=E MUTHUSAMY, ou=SRIVILLIPUTTUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN

சார்பு நீதிபதி,
குளித்தலை.

==============================

சார்பு நீதிமன்றம், குளித்தலை

இ.ம.எண்.8/2024 in

அ.வ.எண்.55/2019

தேதி:17.04.2025

AFT–IA

வரைவு / செவ்வை உத்தரவு

==============================

I.A.NO.3/2024 in O.S.No.189/2019

நாள் : 27.01.2025

உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

முடிவாக, இம்மனுவானது அனுமதிக்கப்படுகிறது. இம்மனுவின் மனுதாரர் எதிர்மனுதாரரின் செலவுத்தொகையாக ரூ.1000/– த்தினை வருகின்ற 17.02.2025 ம் தேதிக்குள் செலுத்த வேண்டும் என்றும், தவறும்பட்சத்தில் இம்மனு தாமாக தள்ளுபடி ஆகிவிடும் என்றும் உத்தரவிடப்படுகிறது. அழைக்க வாய்தா 18.02.2025.

சார்பு நீதிபதி,

குளித்தலை